For Private Circulation Only

செப்டம்பர் 2011 மலர் 4 இதழ் 5

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY

## மாஸ்டரின் சுற்றுப்பயணம்



### மாஸ்டரது மலேசிய வருகை, ஜூன் 22 - 27, 2011

மாஸ்டர், ஜூன் 22-ம் தேதி பிற்பகல், சிங்கப்பூரிலிருந்து மலேசியா வந்து சேர்ந்தார். விமான நிலையத்திலிருந்து அவர் நேரே க்ளாங்கிலுள்ள புதிய மலேசிய ஆசிரமத்தை திறந்து வைக்கச் சென்றார். வந்து சேர்ந்தவுடன் அவர் மிகுந்த களிப்புடன் இருந்தார். அங்கிருந்த 200 அப்யாசிகளை வாழ்த்திவிட்டு, உடனடியாக சத்சங்கம் நடத்தினார். அன்று இரவை ஆசிரமத்திலேயே கழித்தார். அடுத்த நாள் காலை, ஆசிரமத்திலிருந்து பத்து நிமிட தூரத்திலிருக்கும், ப்ரீமியர் ஹோட்டலிலுள்ள கருத்தரங்கத்திற்கான இடத்தில், அனைத்து அப்யாசிளுடன் சேர்ந்துகொண்டார். அவரது வயதிற்கேற்ற வசதிகளில்லாத ஹோட்டலில் இருப்பதனால் விளையக்கூடிய அனைத்து உடல்ரீதியான அசௌகரியங்கள் இருந்தபோதிலும், மாஸ்டர் அந்தக் கருத்தரங்கம் முடியும்வரை அவ்விடத்திலேயே தங்க முடிவுசெய்தார்.

23-ம் தேதி மாலை, சத்சங்கம், 5 மணிக்குத் துவங்குவதாக அட்டவணையிடப்பட்டிருந்தது. ஆனால், அப்யாசிகளை சந்திக்கவும், கருத்தரங்க ஏற்பாடுகளை ஆய்வு செய்யவும் ஆவலுடன் இருந்த மாஸ்டர், மாலை 4 மணிக்கே அந்த பெரிய மண்டபத்தில் வீற்றிருந்தார். பங்கேற்றோர் மகிழும் வண்ணம், அனைத்து காலை மற்றும் மாலை சத்சங்கங்களையும் மாஸ்டர் நடத்தினார். மேலும், மாஸ்டர் லிஃப்டிலிருந்து மண்டபத்திற்கு நடந்து செல்கையில், குழந்தைகளை அன்புடன் வாழ்த்தினார். கருத்தரங்கில், சொற்பொழிவுகள், கூட்டங்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியவை இருந்தன. "ஓர் இதயம், ஒரு மனிதகுலம்" என்ற கருத்தரங்கத் தலைப்பு, கிருஷ்ணா, சந்தோஷ் காஞ்சீ, கம்லேஷ் படேல், கம்பிச் மற்றும் சத்பிர் ஆகிய ஐந்து சகோதரர்களால் வெவ்வேறு கோணங்களிலிருந்து அணுகப்பட்டமையால், சிறப்பு மிக்க

மற்றும் சிந்திக்க வைக்கும் பகுதிகளாக ஆக்கப்பட்டன. மாஸ்டர் அவற்றில் கலந்துகொண்டார்.

மாஸ்டர், 26-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை, மலேசிய ஆசிரமத்தில் கடைசி சத்சங்கத்தை நடத்தினார். மேலும், அனைத்து மலேசிய அப்யாசிகளுக்கும் அன்று தனி தியானங்கள் கொடுக்கப்பட்டன. அடுத்த நாளான 27-ம் தேதி காலை, மாஸ்டர் சென்னைக்கு புறப்பட்டார்.

இந்த பயணத்தின்போதான, மாஸ்டரின் சாதாரண உரையாடல்களிலிருந்து சில மேற்கோள்கள்:

- எந்தவிதமான சந்தேகங்களும், ஆசைகளும் தனக்கு இல்லாததால், தான் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதாக மாஸ்டர் கூறினார் - இவ்விரண்டு விஷயங்களும் மக்களை துயரத்திற்குள்ளாக்கும்.
- ஒரு அப்யாசி, மக்களை சந்திப்பதற்கு மாஸ்டரின் தயார்நிலையைப் பற்றி அவரிடம் கேட்டபோது அவர், "நான் எல்லாவற்றிற்கும் எப்போதுமே தயாராக இருக்கிறேன்!" என்று அழுத்தம்திருத்தமாக பதிலுரைத்தார்.
- மனிதர்களுக்கு அன்பைப் பற்றி தெரியாது என்று பாபூஜி மகராஜ் கூறியிருக்கிறார். அன்பு, படைத்தவருக்கும் படைக்கப்பட்டதற்கும் இடையே இருப்பதாகும்; படைக்கப்பட்டவற்றிற்கிடையே இருப்பதல்ல. படைக்கப்பட்டவற்றிற்கிடையே இருப்பது என்னவென்றால், அது நேசமும் பரஸ்பர சார்புமேயாகும்; அது அன்பு என்று தவறாக அழைக்கப்படுகிறது.
- வலியின்றி ஒருவரால் அன்பு செலுத்த இயலாது. அன்பு என்றால் வலியாகும். வலியில்லையேல் அன்பில்லை.
- பேரின்பம் என்பது இவ்வுலகுடன் தொடர்பே இல்லாத ஒரு விஷயமாகும். அது ஒரு நிலையாகும். களிப்பு என்பது ஒரு நிலையல்ல; அது, மகிழ்ச்சியைப்போல, ஒரு அனுபவமாகும். அன்பானது, ஒரு தாய்க்கும் சேய்க்குமிடையே இருக்கும் அன்பைப் போல, ஒரு தனிநபருக்கும் அவரைப் படைத்தவருக்குமிடையேயான உறவின் தன்மையாகும்.





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## சென்னை, 2011 ஜூன் 27 - ஜூலை 20 வரை

சென்னை விமான நிலையத்தில், மாஸ்டர் நிறைய அப்யாசிகளால் வரவேற்கப்பட்டார். அங்கிருந்து நேராக மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு சென்றார். அவர் தன்னுடைய காட்டேஜை அடைந்தவுடன் "நான் இணைக்கப்பட்டதாக உணர்கிறேன். இப்பொழுது மீண்டும் என்னுடைய ஆற்றலையும், பலத்தையும் பெற்றுவிட்டேன்" என்று கூறினார். ஜூலை 1-ந் தேதி அன்று சில திருமணங்களை நடத்தி வைப்பதாக இருந்தார். அதற்கு சில நாட்களுக்கு முன்பே, "இன்று திருமணங்கள் ஏதாவது நடத்தி வைக்கப்பட வேண்டியிருக்கிறதா?" எனக் கேட்டார்."இன்று இல்லை, வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது" என்று அவரிடம் கூறப்பட்டது. அதற்குப் பிறகு மாஸ்டர், "நாம் தியான கூடத்தில் சத்சங்கம் நடத்தி நீண்ட காலம் ஆகிவிட்டது. சரியா?" என்று கூறினார். பின்னர் தியான கூடத்தில் ஒரு சத்சங்கம் நடத்த விருப்பம் உள்ளதாக கூறினார். அது திடீரென்று எடுக்கப்பட்ட முடிவு. அவருடைய காலை வேலைகளான, இரண்டு பிரிபெக்ட்களை உருவாக்குதல் உட்பட, ஈ-மெயில் அனுப்புதல், காலை சிற்றுண்டி உண்ணுதல் ஆகியவற்றை முடித்துக் கொண்டு, சத்சங்கத்திற்கு தயாரானார். செய்யவேண்டியவை மிக அதிகமாக உள்ளது என்பதைப்போல், பல முறை மாஸ்டர் தன்னுடைய அலுவலகத்திற்கும், படுக்கை அறைக்கும் வேகமாக நடந்து சென்றதை பார்க்க, வியப்பூட்டுவதாக இருந்தது.

ஒரு நாள் காலையில், ஒரு சகோதரர் மாஸ்டரிடம் தனக்கு ஒரு முக்கியமான கூட்டம் இருப்பதாகவும் அதற்காக வெளியே செல்லவேண்டும் என்றும் கூறினார். மாஸ்டர் அவரை சீக்கிரமாகச் செல்லும்படி கூறி, "காலதாமதமாக செல்வதைவிட, முன்கூட்டியே செல்வது விவேகம்" என்று சொன்னார்.

ஆசிரமத்திற்கு வருகை புரிந்திருந்த ஒரு தம்பதியினர், தாங்கள் ஒரு குழந்தையை தத்தெடுத்திருப்பதாகக் கூறினர். அதனைக் கேட்ட மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியுற்றார். பின்னர் அவர், 'குழந்தைகளை தத்தெடுக்கும் மக்களை நான் மிகவும் நேசிக்கிறேன். இந்த உலகத்தில் வீடில்லாத குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள். நான் எப்பொழுதும் அதை ஆதரிக்கிறேன் . ஆனால், எந்த ஒரு சூழ்நிலையிலும், அந்த குழந்தை தத்தெடுக்கப்பட்டது என்று சொல்லிவிடாதீர்கள். குறிப்பாக இந்த சிறு வயதில் சொல்லி விடாதீர்கள். அது சில பதிவுகளை குழந்தையிடம் ஏற்படுத்தும். உங்களது சொந்த குழந்தையைப் போல் நடத்துங்கள்" என்று கூறினார். அதனைத் தொடர்ந்து நடந்த சிட்டிங்கில் அந்த தம்பதியினர் கலந்துகொள்ள ஏதுவாக, யாராவது அந்த குழந்தையைக் கவனித்துக் கொள்ளும்படி கூறினார்.





## குரு பூர்ணிமா - வெள்ளி, ஜூலை 15, 2011

காலையில் வெகு சீக்கிரமாகவே கிளம்பி, ஆசிரமத்தில் கட்டி முடிக்கப்பட்ட, ஆடிட்டோரியத்துடன் கூடிய நூலகத்தை திறந்து வைத்தார். அதன் தொடர்ச்சியாக தியான கூடத்திற்கு முன்கூட்டியே சென்று 7 மணிக்கு காலை சத்சங்கத்தை வழங்கினார். தியானக் கூடம் முழுவதும் நிரம்பியிருந்தது. அருகில் தங்குமிடத்திற்கும் மேலே அமைக்கப்பட்ட பந்தல்களிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

மாலையில், தியான கூடத்தில் சகோ. கணேஷ் மற்றும் சகோ. குமரேஷ் அவர்களால், வயலின் இசை கச்சேரி வழங்கப்பட்டது. மாஸ்டர் அந்த நிகழ்ச்சியை CCTV மூலமே கண்டுகளித்தார். ஆனால், அந்த நிகழ்ச்சி கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலும், ஆர்வமூட்டும் வகையிலும் இருந்ததால், மாஸ்டர் அதனை தியான கூடத்திற்கே வந்து கண்டு

களித்தார். அப்யாசிகளும், இசைக் கலைஞர்களும் மிகவும் மகிழ்ச்சியுற்றனர். முழுநிலவின் வெளிச்சத்தில், அப்யாசிகளுடன் சேர்ந்து மாஸ்டர் அந்த நிகழ்ச்சியை மகிழ்ச்சியுடன் ரசித்தார். அந்த இரவு நினைவு கூறத்தக்க இரவாக இருந்தது. ஒரு புனிதமான நாளுக்கு, அந்த இசைக் கச்சேரியானது, ஒரு சிறப்பான இறுதி நிகழ்ச்சியாக இருந்தது.



For Private Circulation Only

செப்டம்பர் 2011 மலர் 4 இதழ் 5

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்





## திருப்பூர், ஜுலை 26 முதல் 29 வரை

பிறந்த நாள் விழாக்கள் ஜுலை 25ம் தேதி முடிவடைந்தன. மாஸ்டர் 29ம் தேதிவரை திருப்பூரில் தங்கியிருக்க முடிவு செய்தார். அப்யாசிகள் அவர்கள் செல்வதற்கு முன்பாக மாஸ்டரை சந்திக்க விரும்பினார்கள். இத்தகைய மிகப்பெரிய விழாவிற்குப்பின்னர் மாஸ்டர் களைப்புடன் இருந்தார். அவருக்கு ஓய்வு தேவைப்பட்ட போதிலும், மாஸ்டர் அவரால் முடிந்தவரை பலரை சந்திப்பதில் நேரத்தினை செலவழித்தார். ஒரு பேச்சின்போது மாஸ்டர், " நான் சந்தித்த ஒவ்வொருவருக்கும் மற்றும் நான் சந்திக்காத ஒவ்வொருவருக்கும் என்னால் இயன்ற அளவு அனைத்தையும் ஏற்கனவே கொடுத்துவிட்டேன்" என்றார்.

அப்யாசிகளின் குழு ஒன்றிடம் மாஸ்டர், " இத்தகைய விழாக்களுக்கு நீங்கள் வருகின்ற போது, உடன் அவசரமாக திரும்பாமல் தயவுசெய்து மேலும் சில நாட்கள் தங்கவேண்டும். தயவுசெய்து அவசரப்படாமல், ஓய்வாக அதனை மிக எளிதாக எடுத்துக்கொண்டு, உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலம் அந்த சுற்றுச்சூழ்நிலையில் இருக்கவேண்டும் " என்றார். சுற்றுச்சுழல் பற்றி பேசுகையில் ஒரு அப்யாசி, கூடாரங்கள் அகற்றப்படுவதையும் பின்னர் அந்த இடம் காலியாக இருப்பதையும் காணும் போது மிகவும் சோகமாக இருப்பதாகக் கூறினார். மாஸ்டர், " இத்தகைய உணர்வினை நானும் 24மாலை, அப்யாசிகளின் முதல் குழுவினர் செல்லத் தொடங்கியது முதலே உணரத் தொடங்கினேன் " என்றார்.

விழாவில் பணி செய்வதற்கு தமக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு ஒரு அப்யாசி மாஸ்டருக்கு நன்றி சொல்லும்போது அவர், "ஒருவர் வேலை செய்ய விருப்பப்படும் போது, வேலை அவரைத்தேடி வரும்" என்றார்.

## சென்னை - 29 ஜுலை 2011 முதல் 15 ஆகஸ்ட் 2011 வரை

மாஸ்டர் 29 அன்று சென்னை வந்தடைந்தவுடன் நேரடியாக மணப்பாக்கம் ஆசிரமம் சென்றார். வந்தவுடன் வழக்கமான அவருடைய பணி தொடங்கியது.

மாஸ்டர், சகஜ மார்க்கத்தின் வரலாறு பற்றி பேசுவதற்கான ஒரு புதிய திட்டத்தில், ஈடுபட்டுள்ளார். திருப்பூரில் அவர், "ஒருவர் உயிருடன் இருக்கும்போது, நாம் விவரங்களைப் பெற விரும்புவதில்லை. ஏராளமான விவரங்கள் ஏற்கனவே நிரந்தரமாக அழிந்துவிட்டன," எனக்கூறினார். பல நாடுகளில் சகஜ மார்க்கத்தின் வரலாற்றினை சேகரிக்கும் சில அப்யாசிகளின் முயற்சிக்கு தமது பாராட்டைத் தெரிவித்தார். ஐரோப்பாவில் சகஜ மார்க்கத்தின் சரித்திரத்தைப் பற்றி, ஐரோப்பியர்கள் மாஸ்டரைப் பேட்டி கண்டனர். ஆகஸ்ட் 2 முதல் 5வரை காயத்திரியில் தங்கிய பின்னர், 6 ம்தேதி காலை மணப்பாக்கம் திரும்பினார்.

ஆகஸ்ட் 2 ம் தேதி காயத்திரியில் இரவு விருந்துக்கு 150 வெளிநாட்டு அப்யாசிகளை அவர் அழைத்திருந்தார். மாஸ்டரின் குடும்பத்தினர் அன்புடன் விருந்து அளித்தனர். ஒவ்வொருவரும் இரவு உணவு எடுத்துக்கொண்டார்களா என்பதை உறுதி செய்து கொண்டனர். முதுமையின் தாக்கத்தினை மாஸ்டரிடம் ஒருவரால் காண இயலும். நாற்காலியில் அமர்வதற்கும், அதில் இருந்து எழுவதற்கும் மிகவும் சிரமப்படுவதைப் பார்க்க மிகவும் வேதனையாக இருந்தது. ஒரு முறை, மாஸ்டர் அவரது நாற்காலியில் இருந்து எழ சிரமம் கொண்ட போது, சில அப்யாசிகள் அவருக்கு உதவி செய்ய முயன்றனர். அவர் உதவி வேண்டாம் எனத் தெரிவித்துவிட்டு முயற்சிசெய்து தானாகவே எழுந்து கொண்டார்.

மாஸ்டர் ஆகஸ்ட் 6 ம்தேதி, மணப்பாக்கம் திரும்பி வந்தபோது, மும்பையில் இருந்து வந்த அப்யாசிகளின் குழு, அங்கு வந்து கொண்டிருக்கும் நிலத் திட்ட செயல்பாடு குறித்து விவரித்தனர். மாஸ்டர் விவரங்களைத் தெரிந்து கொள்வதில் மிக்க கவனம் செலுத்தினார். ஒரு சகோதரர் இத்திட்டம் பாதியாகத்தான் உள்ளது, இன்னமும் முழுமையடையவில்லை எனத் தெரிவித்தபோது, மாஸ்டர், யானையின் தும்பிக்கை தெரியத்தொடங்கும்போது அதன் வாலும் நிச்சயம் வெளி வரும் என்ற பொருள்படும் இந்தி பழ மொழியினைத் தெரிவித்தார்.

ஒருநாள் இரவில், இரவு உணவுக்குப் பின்னர், ஒரு சகோதரி மாஸ்டரிடம், தமக்கு சிறிது நேரம் ஒதுக்கும்படி கேட்டபோது, "தற்போது நான் மிகவும் களைப்பாக உள்ளதை நீங்கள் பார்க்கலாம். நான் எத்தகைய உணர்வில் இருக்கின்றேன் என நீங்கள் அறிந்து கொண்டபின்னர், உங்களது கோரிக்கையினைத் தெரிவிக்கவேண்டும்," என்று மாஸ்டர் கூறினார். இது அனைவருக்கும் ஒரு பாடமாக இருந்தது.

மாஸ்டர், அக்கறை எடுத்துக்கொள்ளுதல் பற்றி பேசினார். “எந்த துறையாக இருந்தாலும் அக்கறை எடுத்துக்கொள்ளுதல் தான் முதல் படி. இதனைத்தான் பாபுஜியும் கூறினார். சகஜ மார்க்கத்திலும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது." அவர் கூறினார், அக்கறை எதுத்துக்கொள்ளுதல் என்பது அதனை நம்மில் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்வதுதான், அதாவது மாஸ்டர், மிஷன், பயிற்சிமுறை ஆகியவற்றினை நம்முடையதாக ஆக்கிக்கொள்வதுதான்.

மாஸ்டர், ஆகஸ்ட் 13 முதல் 15 வரை, மணப்பாக்கம் ஆசிரமத்தில் நடைபெற்ற, மைய மற்றும் மண்டல பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு அருளினார். மேலும் துவக்க உரையினையினையும் நிறைவு உரையினையும் நிகழ்த்தினார்.

சுதந்திர தினத்தின் போது, மணப்பாக்கம் ஆசிரமத்தில் தியான கூடத்தின் முன்பாக 150 அப்யாசிகள் மற்றும் குழந்தைகள் சூழ, சகோ.ஏ.பி.துரை தேசிய கொடியினை ஏற்றி வைத்தார்.

மிஷனுக்கான நிலத்தினை பதிவு செய்யும் பொருட்டு, மாஸ்டர் 16ம் தேதி டெல்லிக்கு புறப்பட்டுச்சென்றார். பிறகு 18 ம் தேதி மீண்டும், புதிய திட்டத்திற்கான நிலம் பதிவு செய்ய ஹைதராபாத் சென்றார்.





மண்டல, மையப் பொறுப்பாளர்கள் பணிமுகாம்

## தென் மண்டலங்களின் மைய, மண்டலப்பொறுப்பாளர்கள் பணி முகாம், சென்னை, 13- 15 ஆகஸ்ட் 2011

ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ் நாட்டின் ஆசிரம மைய, மண்டலப்பொறுப்பாளர்களுக்கான பணி முகாம், மணப்பாக்கத்தில் ஆகஸ்ட் 13-15 நடைபெற்றது. மாஸ்டரது சிட்டிங், அதன் பின்னான அவரது உரையுடன் கூட்டம் துவங்கியது. மாஸ்டர் தனது உரையில், பிரிசெப்டர்கள் மிஷனின் ரத்த நாளங்கள் என்றும், அவர்கள் மாஸ்டரின் பணியை முன்னோக்கி நடத்திச் செல்கிறார்கள் என்றும் வலியுறுத்தினார். பாபுஜி தென்னகத்திற்கு வந்து பிராணஹுதி அளித்தார் என்றும், அதன் பலனை நாம் 20 வருடங்களுக்குப் பிறகு பார்க்க முடிகிறது என்பதையும் சுட்டிக்காட்டினார். பிரிபெக்ட்கள், பணியைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு, ஆழ்ந்த ஈடுபாட்டுடன் சேவை செய்ய வேண்டும் என்றும், அவர்கள் அவ்வாறு சேவை செய்யும் போது, மாஸ்டரைப்போல் உயர்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு எப்பொழுதும் இருக்கும் என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, சகோ. கிருஷ்ணா உலக சேவைக்குழுவை (GST- Global service team) அறிமுகப்படுத்தி உரையாற்றினார். ஆன்மீகப்பணி பிரிபெக்டகளின் முதன்மையான கடமை ஆதலால், அவர்கள் அதில் கவனம் செலுத்தவேண்டும் என்றும், நிர்வாகப் பணிகளை தன்னார்வத் தொண்டர்களிடம் கொடுத்து விடவேண்டும் என்றும் கூறினார். GST யின் பல்வேறு அங்கத்தினர்கள், தங்கள் முக்கியப்பணி பற்றிய கருத்துரை அளித்தனர். அதனைத்தொடர்ந்து, ஒரு வினா-விடை நிகழ்ச்சி இருந்தது. நிகழ்ச்சி மேம்பாடு, பயிற்சி விநியோகம், சமுதாயக் கட்டமைப்பு, உறுப்பினர் சேவை, நிலையான சொத்துக்கள், செயல்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் ஆகியவை அதன் பல்வேறு குழுக்கள் ஆகும். இந்த சேவைகளை, அவரவர் மையங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான முதல்நிலை வரைபடத்தை வடிவமைக்க, அவர்கள் அதிக நேரம் பணி புரிந்தனர்.

இறுதி நாளன்று, பிரிபெக்ட் பணியை எவ்வாறு செய்வது என்பதைப் பற்றி, சகோ. ராஜகோபாலன் வலியுறுத்திக் கூறினார். அனைத்து மண்டலங்களும் மற்றும் முக்கியமான மையங்களும், அவர்களது அடுத்த ஒரு வருடச் செயல்பாடுகளின் திட்டத்தை அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன. மாஸ்டர் தனது உரையுடன் கூட்டத்தை முடித்து வைத்தார். முதலில் நாம் நம்மை நல்ல மனிதர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறினார். மேலும் அவர், "நீங்கள் எல்லோரும் உலக சேவை குழுவிற்காக இருக்கும்போது, நான் தனி நபர் மற்றொரு தனி நபருக்கு சேவை செய்தல் (ISI - Individual Serving Individual) என்பதற்காக இருக்கிறேன். மனிதனாக இருங்கள், உங்கள் எதிரில் இருக்கும் நபரை அதிகமான அன்புடன் எதிர்கொண்டு, இதய பூர்வமாக சேவை செய்யுங்கள். நீங்கள் சுத்தமாக இருக்கும் போதுதான் இன்னும் சிறப்பாக சேவை புரிய முடியும். நீங்கள் அப்யாசியைக் கவனித்துக் கொள்ளுங்கள், அவர் உங்களைக் கவனித்துக் கொள்வார்," என்று கூறினார்.

## ஆப்பிரிக்க அப்யாசிகளுக்கான கருத்தரங்கு

ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வந்த சுமார் 60 அப்யாசிகளுக்கான முதல் கருத்தரங்கு, 16ம் தேதி முதல்22ம் தேதி வரை மணப்பாக்கத்திலும், பின்பு திருப்பூரிலும் நடைபெற்றது. உரைகள், தனி சிட்டிங்குகள், சத்சங்கங்கள் மற்றும் ஆப்பிரிக்க சகோதர சகோதரியரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந்த பயிற்சி முகாம்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு வார தீவிரப் பயிற்சியாக அது அமைந்தது. அநேக பிரதிநிதிகள், இந்தியாவிற்கு வருகை புரிந்து மாஸ்டரை முதன் முறையாகச் சந்திக்க, பல மாதங்களாகச் சேமித்து வைத்திருந்தனர். 16ம் தேதி அன்று, மாஸ்டர் உரையாற்றி, சத்சங்கம் நடத்தினார். அவரது ஆழமான உரை, அனைவரையும் ஊக்குவிப்பதாக இருந்தது. அது, ஆப்பிரிக்க மக்களையே இலக்காகக் கொண்டிருந்தாலும், சந்தேகம் இன்றி அனைத்து மனித இனத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

'இருண்டு' இருப்பவை நாடுகள் அல்ல, ஆனால் மனிதர்களின் மனங்களே என்றும், பழங்குடி மக்களின் பழக்க வழக்கங்கள், மூடநம்பிக்கைகள் ஆகிய பல, முழுவதுமாக வெளியேற்றப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் அவர் கூறினார். பயமின்றி பணியாற்றி, அவர்களது மக்களின் மனங்களில் ஒளியேற்றுவதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளும்படி, அங்கு கூடியிருந்தவர்களிடம் அவர் கேட்டுக் கொண்டார். எந்த ஒரு மாற்றத்தையும் உருவாக்கவும், ஒரு உலகத்தை, ஒரு மனித இனத்தை உருவாக்குவதற்கும் உள்ள ஒரே வழி, மக்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதேயாகும்.

சகோ. கிருஷ்ணாவின், 'வேற்றுமையில் ஒற்றுமை', சகோ. ராஜகோபாலனின் சகஜ மார்க்கத்தின் தனித் தன்மையைக் கோடிட்டுக் காட்டுதல் மற்றும் சகோ. A.P.துரையின் 'பங்குகளும் பொறுப்புகளும்' ஆகிய உரைகள், ஆர்வமூட்டுபவையாகவும், ஊக்கமளிப்பவையாகவும் இருந்தன.

கருத்தரங்கில் பங்கேற்றவர்களில் பெரும்பாலோர், மணப்பாக்கத்திலிருந்து திருப்பூருக்கு பஸ் மூலம் பயணித்தனர். மாஸ்டர் கூறியபடி, அவர்கள், நாட்ராம்பள்ளி ஆசிரமத்தில் மதிய உணவுக்காகவும், கிருஷ்ணகிரி ஆசிரமத்தில் சிற்றுண்டிக்காகவும் பயணத்தை நிறுத்தினர். சகோதர சகோதரியருக்கு, மிகவும் அன்புடன் உணவு வழங்கப்பட்டது. இந்த ஆசிரமங்களைப் பார்த்த அனுபவம், அனைவருக்கும் மிகப் பெரிய கற்றல் அனுபவமாக இருந்தது.





திருப்பூரில் சகோ. ஜேம்சும் சகோ. மைக்கேலும் உரையாற்றினர். மாஸ்டர், தன் முடிவுரையில், "நாம் பல மொழிகளை கொண்டுள்ளோம். ஆனால் நம்மிடையே பரஸ்பரம் அன்பிருக்கும் போது, மொழி ஒரு தடையே இல்லை, கண்கள் தான் பேசுகின்றன இல்லையா? ஆகையால் நாம் மனிதர்களாக மட்டுமே இருந்து கடவுள் நமக்களித்த மனிதப்பண்புகளான அன்பு செலுத்துவது, பகிர்ந்துகொள்வது, மற்றவரைப்பற்றி அக்கறை கொள்வது போன்றவற்றை அனுபவிப்போம். எல்லாவற்றிகும் மேலாக மனிதத்துவத்தை கூறு போடாமல் இருப்போமாக. அதற்கு நாம் ஏட்டளவில் மட்டுமின்றி, பயிற்சியிலும் கொண்டுவர வேண்டும். கடவுள் நம்மூலம் அவருடைய மொழியான மௌனத்தால் பேசுகிறார் என்பதை நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டும். இம்மொழி, மனதில் இருந்து மனதிற்கு அல்லாது, இதயத்திலிருந்து இதயத்திற்கு ஏற்படும் தொடர்பாகும்" எனக்கூறினார்.

மாஸ்டரின் உரையைக்கேட்ட ஒவ்வொரு அப்யாசியும், அதை மன நிறைவோடு உள்வாங்கிக்கொண்டு,மேலும் மெருகேற்றி வளர்த்து, ஒவ்வொரு மனிதனையும் இவ்வொளியால் ஈர்க்க உறுதி பூண்டனர்.

## அனைத்திந்தியமையங்களில், மாஸ்டரின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்

கொல்கத்தாவில் நடைபெற்ற விழாவில் சுமார் 275 அப்யாசிகளும், குழந்தைகளும் கலந்து கொண்டனர். அன்புடன் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. காலை உணவிற்குப்பின் மாஸ்டரின் "ஒழுங்குமுறை" பற்றிய உரை ஹிந்தியில் ஒலிபரப்பப்பட்டது. அதன் பின், மாஸ்டரின் வெளி நாட்டுப்பயணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், DVD மூலம் ஒளி பரப்பப்பட்டது. பயிற்சி முறையின் பல்வேறு அம்சங்களைப்பற்றிய வினா-விடை நிகழ்ச்சியில் புது அப்யாசிகள் உட்பட அனைவரும் மிகுந்த ஆர்வமுடன் பங்கேற்றனர். மாஸ்டரின் வாழ்க்கை சரிதமான Down Memory Lane'லிருந்தும் வினா-விடை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மதிய உணவிற்கு பின் யாவரும் அமைதியாக தத்தம் ஆன்மீக உணர்விலேயே திளைத்திருந்தனர். பின் மாலை சத்சங்கம் நடைபெற்றது.

ஜோத்பூரில் நடைபெற்ற மூன்று நாள் விழாவில் சுமார் 190 அப்யாசிகளும், குழந்தைகளும் கலந்து கொண்டனர். தியான மண்டபம் நன்றாக சுத்தமாக்கப்பட்டு தெய்வீகமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்புடனும், பக்தியுடனும் பஜனைப்பாடல்கள் பாடப்பட்டன. பயிற்சி முறை பற்றிய பல் வேறு அம்சங்கள் குறு நாடகமாக குழந்தைகளால் நடத்தப்பட்டது. எல்லா அப்யாசிகளும் தங்கள் நடை முறை வாழ்க்கையில் மாஸ்டர் தங்களை எவ்விதம் மாற்றமுறச்செய்தார் என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்தனர். வாழ்க்கையில் சந்திக்கும் சங்கடங்களையும் பிரச்சினைகளையும், மாஸ்டரின் பால் அன்பு, பக்தி மற்றும் சரணாகதி கொண்டால் அவற்றை சமாளிக்கும் திறனை பெறமுடியும் என்ற எண்ணத்தை நினைவிலிருத்திச்சென்றனர்.

பில்வாடாவில் "அன்பில் ஒழுங்குமுறை" என்ற கருத்தில், மாஸ்டரின் உரைகள் சுவரொட்டிகள் மூலம் காண்பிக்கப்பட்டன. காலை சத்சங்கத்திற்குப்பின் பஜனைப்பாடல்கள், குறு நாடகம், DVD ஒளிபரப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடந்தன.

ஜெய்பூரில் பயிற்சி முறை பற்றிய பல்வேறு அம்சங்களின் மீதான உரைகளும், விவாதங்களும் நடத்தப்பட்டன. பின்னர் நடந்த குழந்தைகளின் கலை நிகழ்ச்சி எல்லோர் மனதையும் தொட்டது.

இம்மூன்று நாள் நிகழ்ச்சியில் சுமார் 300 அப்யாசிகளும், குழந்தைகளும் கலந்து கொண்டனர்.


ஜோத்பூர்


ஜெய்பூர்



## சேவையின் முக்கியத்துவம்

"மாஸ்டரை விரும்புவது என்பது கடினமான ஒன்று. ஆனால் அது சாத்தியமானது" என்று ஜனவரி 10, 2010 அன்று மிஷனில் கூடிய விழாப்பங்கேற்பாளர்களுக்கு நடத்திய உரையில் மாஸ்டர் கூறினார். வெகு வருடங்களுக்கு முன்பு, அவருடைய மாஸ்டர் அவருக்கு கற்றுக்கொடுத்திருந்த, அன்பு என்பது நமக்கு என்னவென்றே தெரியாத ஒன்று என்பதை வலியுறுத்தினார். அதனை சேவையின் மூலமாக மட்டுமே நம்மால் வளர்த்திக்கொள்ள முடியும் என்றும் கூறினார்.

### தன்னார்வத் தொண்டர்கள் பதிவுமையம்

இம்மையத்தை நோக்கி தொடர்ந்து, பாதுகாப்புத்துறை, சமையல்கூடம், உணவருந்தும் மையம், ருசி கபே, தியானக்கூடம், உடல்நலம், போக்குவரத்து, சுகாதாரம் என அனைத்து துறைகளுக்கும் தன்னார்வத் தொண்டர்கள் வந்து பதிவு செய்தவண்ணம் இருப்பதை பார்க்க முடிந்தது. மேலும் எங்குமே தன்னார்வத்தொண்டர்கள் தட்டுப்பாடு இல்லை. திருப்பூர் மற்றும் அதனருகிலிருந்த மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் தொடர்ந்து பணியாற்றி, விழா முழுவதும் அனைவரும் சௌகரியமாக இருக்கும் வகையில் பார்த்துக் கொண்டனர்.

### கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் பற்றிய ஒரு தொகுப்பு

இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து தன்னார்வத் தொண்டர்கள் வந்து கொண்டாட்டங்களுக்காக மையத்தை தயார்படுத்தும் செயலில் பங்கேற்பதை பார்க்க முடிந்தது.

- ஜூன் முதல் வாரத்தில் வந்த கேரளாவைச் சேர்ந்த அப்யாசிகள் பொதுப்படையில் சுத்தமாக்கும் பணியில் ஈடுபட்டு தேவையற்ற களைகளை அகற்றுதல், மாஸ்டர் குடிலின் அருகில் மழை நீர் வடிகால் அமைத்தல், கட்டுமானப் பணிகளுக்கு செங்கல் மற்றும் மற்ற பொருள்களை எடுத்துச் செல்லல் ஆகிய பணிகளில் ஈடுபட்டனர்.
- குஜராத்தைச் சேர்ந்த அப்யாசிகள் இந்த பணிகளில் ஜூலை முதல் வாரத்தில் வந்து கலந்து கொண்டனர். சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றத்தைக் காண



முடிந்ததுடன் தன்னார்வத் தொண்டர்களின் உள்ளத்திலும் மாற்றம் ஏற்பட்டது.

- ஆந்திராவைச் சேர்ந்த அப்யாசிகள் குரு பூர்ணிமாவிற்கு முன்பு திருப்பூர் வந்தடைந்தனர். அனைவரும் கடமையில் மூழ்கியிருந்தனர். மேலும் ஒரு சிலர், உற்சவத்தின்போது மாஸ்டரின் திருவுருவத்தைக் காண தியானக் கூடத்திற்கு கூட வராமல் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.
- திருவண்ணாமலை, வேலூர், ஈரோடு மற்றும் திருப்பூரைச் சேர்ந்த தமிழ்நாட்டு தன்னார்வலர்கள் தியானக் கூடத்தில் இருந்த கற்களை அகற்றி, விரிப்புகளை பரப்பியதுடன், மேடைக்கு அருகிலிருந்த தேவையற்றவைகளை அகற்றினர். ஒரு ஆழ்ந்த அமைதி மற்றும் ஒரு ஆன்மீக சூழலை உருவாக்கிய இந்த செயல்கள் ஒரு மறக்க முடியாத அனுபவமாகும்,
- கர்நாடகாவைச் சேர்ந்த தன்னார்வலர்கள் கொண்டாட்டங்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே வாரக்கடைசி நாட்களில் போக்குவரத்து எற்பாடு செய்து கொண்டு திருப்பூர் வந்து பணியாற்றினர். கொண்டாட்டங்களின்போது அவர்கள் உணவுக்கூடம், பாதுகாப்புத்துறை, குழந்தைகள் மையம், பதிவுமையம், தியானக்கூடம் மற்றும் பிற பகுதிகளில் பணியாற்றுவதை காண முடிந்தது.

### பணியாற்றிய சூழல்

அனைத்தும் அதனதன் இடங்களில் தானாகவே அமைவது போலவும், தன்னார்வலர்கள் மாஸ்டரின் கைகளில் கருவிகளைப் போலவும் தோன்றியது. ஒரு எளிய வாழ்க்கை வாழ்வதன் அர்த்தம் தன்னார்வலர்களுக்கு உதயமானது. தன்னார்வலர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கிடையில் அன்புப் பிணைப்பும், சகோதரத்துவ உணர்வும் இருந்தது. இரவு பகலாக வேலை செய்தபோதிலும், ஆற்றல் மற்றும் உற்சாகத்தின் அளவு குறையவே இல்லை.

## சகஜ சுற்றுலா, அஜ்மீர், ராஜஸ்தான்



10,ஜூலை2011 அன்று சத்சங்கத்தைத் தொடர்ந்து, அஜ்மீர் மற்றும் கிசான்கர் மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் புஸ்கருக்கு சுற்றுலா சென்றனர். சுமார் அறுபது அப்யாசிகள் அன்றைய தினத்தை ஒரு அப்யாசியின் பண்ணை வீட்டில் கழித்தனர். இந்த நிகழ்ச்சி சகஜ மார்க்கப் பயிற்சியின் அடிப்படை பயிற்சி முறை பற்றிய ஒரு கலந்துறையாடலுடன் தொடங்கியது. சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் தங்களது பல்வேறு சந்தேகங்கள் நிவர்த்தியடைந்ததாகவும், ஆன்மீகத்தின் ஆழமான தன்மைகளை அறிந்து கொண்டதாகவும் உணர்ந்தனர். குழந்தைகள் கலைநிகழ்ச்சிகளை கவரும் வகையில் நடத்தினர். இந்த நிகழ்ச்சி மாலைச் சதசங்கத்துடன் முடிவடைந்தது.

செப்டம்பர் 2011 மலர் 4 இதழ் 5
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## இளைஞர் நிகழ்ச்சி, கொல்கத்தா

18 முதல் 30 வயதிற்குள் உள்ள, 26 ஆர்வமிக்க இளைஞர்களுக்கு, 2011 ஆகஸ்ட் 14 மற்றும் 15 தேதிகளில், இரு நாள் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. சிறு அறிமுக நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பண்டாராவின் போது ஏற்பட்ட அனுபவங்களை, பங்கேற்பாளர்கள் பகிர்ந்து கொண்டனர். மாற வேண்டும் என்ற வலுவான தூண்டுதல், பண்டாராவை முடித்து திரும்பும் போது நம்முள் இருக்கிறது, என்று அனைவரும் கலந்துரையாடலின் போது ஒப்புக் கொண்டனர். நம் தினசரி வாழ்க்கையில், மாற்றம் என்பது, பண்டாராவின் போதுள்ள பேரின்பமான மற்றும் தெய்வீக சூழலை, ஆர்வத்துடன் எடுத்துக் கொள்ளும் போது மட்டுமே வெளிப்படத் துவங்குகிறது. இந்த தூண்டுதலை, நிலையான மாறுதலாக மாற்றுவது, ஒவ்வொருவரிடத்திலும் தான் உள்ளது.

மாலை சத்சங்கத்திற்கு பின், அனைவரும் கூடைபந்து விளையாட்டில் கலந்து கொண்டனர். இரவு உணவிற்கு பின் நிகழ்ந்த பட நிகழ்ச்சியுடன் நாள் நிறைவடைந்தது.

மறுநாள், கதையை அடிப்படையாகக் கொண்டு பயிலும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதன் மூலம், நல்லது மற்றும் மகிழ்வூட்டுவதற்கும் நடுவில் ஏற்படும் குழப்பங்கள் பற்றியும், மகிழ்வூட்டுவது என்பதென்ன, மற்றும் அது தொடரும் போது அதனால் ஏற்படும் வலி, போன்ற காரணங்கள் பற்றியும், சிந்திப்பதில் ஊக்கமளித்தன.

'வாழ்க்கைக் காலங்கள்' என்றழைக்கப்பட்ட நிகழ்ச்சி, நம் தினசரி வாழ்க்கையில் அனுபவிக்கும் வெவ்வேறு காலங்கள் பற்றியும், நாம் எவ்வாறு அந்த காலத்தின் உறுப்பினர்களாக உள்ளோம் என்பதும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது. குழுக்கள் இதனை நாடகமாக அரங்கேற்றினர். சிரிப்பும், வேடிக்கையும் நிகழ்ச்சியில் கலந்திருந்தது. ஒன்றிணைந்து செயலாற்றுவதன் முக்கியத்துவத்தை உணர்த்தியதுடன், ஆன்மீகத்தையும், நன்னெறி மதிப்புகளையும், நாம் வாழும் ஒவ்வொரு காலத்திற்கும் எடுத்து செல்லும் அவசியத்தை பற்றியும் உணரப்பட்டது.

அந்நாளின் இறுதி நிகழ்ச்சியில், பங்கேற்பாளர்கள் தங்கள் பயிற்சியில் கால ஒழுக்கமின்மைக்கான காரணங்களையும், ஏற்படும் தடைகளை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியும் ஆராய்ந்தார்கள்.

கருத்தரங்கு முழுவதும், அனைவரும் தங்கள் தனிப்பட்ட பயிற்சியில் கவனம் செலுத்தியும், சுய ஒழுக்கத்துடன் இருக்கவும், மேலும் தினசரி வாழ்க்கையில் அதனை செயல்படுத்தவும் ஊக்கமளிக்கப்பட்டது.

## இளைஞர் கருத்தரங்கு, காசியாபாத்


காசியாபாத்தில், 10, ஜூன் 2011 அன்று, இளைஞர் கருத்தரங்கு நடத்தப்பட்டது. வாழும் குருவின் பங்கும், தேவையும் பற்றி 50 அப்யாசிகள் கலந்துரையாடினர். நம் மாஸ்டரைப் பற்றி வெவ்வேறு சிறப்பம்சங்களும், மிஷனின் வரலாறும் கருத்தரங்கில் இடம் பெற்றிருந்தன. மற்ற மையங்களில் செய்கின்ற இளைஞர் செயல்பாடுகளும் மேற்கோளிடப்பட்டன. சகஜ மார்க்கத்தின் சரியான பயிற்சிகள், குறிப்பாக சுத்திகரிப்பு பற்றி ஆழமாக உரையாடப்பட்டது. தன்னார்வ வேலைகளையும், அதை செய்வதற்கான வழிமுறைகளையும் பற்றி போற்றத்தக்க வகையில் விளக்கப்பட்டன. ஆசிரம பராமரிப்பிற்கு, தொடர்ந்து தன்னார்வ சேவைகள் தேவைப்படும் பகுதிகள் பற்றியும் விவாதிக்கப்பட்டன. இளைஞர்கள், ஆசிரம பராமரிப்பில் தனது பங்கை புரிந்து கொண்டு, தங்கள் சேவையை தொடர்ந்து செய்ய முன்வந்தனர்.

## எக்கோஸ் செய்தி மடலிலிருந்து கேள்வி பதில்

எக்கோஸ் செய்தி மடலிலிருந்து கேள்வி பதில் நிகழ்ச்சியொன்று 2011ஆகஸ்ட் 15ம் நாள், ஜாம்நகர், குஜராத்தில் நடத்தப்பட்டது. முப்பது நிமிடத்திற்குள், கொடுக்கப்பட்ட பதில்களிலிருந்து சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் கேள்விகள் இருந்தன. பங்கேற்பாளர்கள் போட்டியில் சிறப்பாக செய்வதற்காக, போட்டி துவங்குவதற்கு முன், இருபது நிமிடங்கள் எக்கோஸ் செய்தி மடலை படிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது. கிட்டத்தட்ட இருபது அப்யாசிகள் கலந்து கொண்டனர். சரியான ஒவ்வொரு பதில்களுக்கும் ஐந்து மதிப்பெண்ணும், தவறான பதில்களுக்கு ஐந்து மதிப்பெண் குறைப்புமாக வினாக்கள் அமைக்கப்பட்டிருந்தன. சகோ. அனுஜ் மற்றும் சகோ. A.R. சத்ரிவாலா, முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளைத் தட்டிச் சென்றனர். நிறைய அப்யாசிகள் இந்த செய்தி மடலைப் படிப்பதற்கு ஊக்குவிப்பதற்காகவே, இவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டது. திருப்பூர் பண்டாராவை பற்றிய சிறப்பு இதழை, அனைவரும் பாராட்டினர்.



# தின்சுகியா ஆசிரமம், அஸ்ஸாம்





## துவக்கம்

சிறிய ஆசிரமமாக இருந்த போதிலும், தின்சுகியா ஆசிரமம் இந்தியாவின் மூன்றாவது மிகப் பழமையான ஆசிரமம் ஆகும். கௌஹாத்தியிலிருந்து 480 கி.மீ தொலைவிலும், திப்ருகர் விமான நிலையத்திலிருந்து ஒரு மணி நேரப் பயணத்திலும் இருக்கிறது. அஸ்ஸாமிய, வங்காள மற்றும் ஹிந்தி போன்ற பல மொழி பேசும் மக்களைக் கொண்ட தின்சுகியா, அஸ்ஸாமின் வர்த்தக தலைநகராகவும் உள்ளது.

மிஷனின் முன்னாள் இணை செயலர், மறைந்த சகோ. காசிராம் அகர்வால் அவர்கள், இம்மையத்தின் முதல் அப்யாசி ஆவார். அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகமாகவே, மையத்தின் அப்யாசிகள், நகரத்தின் மையத்தில், 3500 சதுர அடி உள்ள பழைய கிடங்கும், அதைச் சுற்றி 4000 சதுர அடி உள்ள நிலமும் வாங்கினர். இந்த ஆசிரமம், மத்திய பஸ் நிலையத்திலிருந்து கல் எறியும் தூரத்திலும், இரயில் நிலையத்திலிருந்து 3கி.மீ. தொலைவிலும் உள்ளது.

## பாபுஜி மகராஜின் முன்னோடியான பணிகள்

1961 -ம் ஆண்டு பாபுஜி மகராஜ் முதன் முதலாக இம்மையத்திற்கு வருகை புரிந்தார். அந்த நாட்களில் அவர் இரயில் மார்க்கமாக பயணம் செய்தும், பிரம்மபுத்திரா நதியை படகு மூலம் கடந்தும், இந்தியாவின் வடகிழக்கு மூலையான இம்மையத்தை அடைந்தார். இதனைத் தொடர்ந்து அவர், 1965, 1968, 1969, 1970, 1973, 1975 மற்றும் 1977 ஆகிய வருடங்களில் திசுகியாவிற்கு வருகை புரிந்தார்.

இந்தியாவின் அனைத்துப் பகுதிகளின் அப்யாசிகளும் பங்கேற்க,1977, நவம்பர் 25-ம் தேதி, பாபுஜி மகராஜ் இம்மையத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர், "ஆனால் சகஜ மார்க்கத்தில் பிரணாஹுதியின் நறுமணம் நிறைந்திருக்கிறது என்பது நிச்சயம். ஆனால் இன்னும் அன்பு, பக்தி என்ற அம்சங்கள் பின்தங்கி இருக்கின்றன. தியானச்செயலுடன், இவ்விரண்டும் உள்ளிருத்தல் அவசியமாகும். இந்த அம்சங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென வற்புறுத்துவது எனக்கு அவசியமாகிறது. ஏனெனில், இவ்வாறு செய்வதன் மூலம், சாதகன் தனது இலட்சியத்தை வெகு சீக்கிரம் அடையக்கூடும்," என்று கூறினார்.

சாரிஜி மகராஜ் 1985, 1986 மற்றும் 2002-ம் ஆண்டுகளில், இம்மையத்திற்கு வருகை புரிந்தார். 2002 -ம் ஆண்டு அவர் தின்சுகியா மற்றும் திக்பாய் வந்த போது, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து 700 அப்யாசிகள் வந்திருந்தனர். 2002, நவம்பர் 25 -ம் தேதி நடந்த தின்சுகியா ஆசிரமத்தின் வெள்ளி விழாவின் போது, அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலிருந்து 200 அப்யாசிகள் பங்கேற்றனர்.

## ஆசிரம புதுப்பித்தல்

ஆசிரமம், முதலில், மாஸ்டரின் அறை, சமையலறை, உணவுக்கூடம் மற்றும் அழகிய பசுமையான பெரிய தோட்டத்துடன், ஒரு மாடி RCC கட்டிடத்தில் இருந்தது. மாஸ்டரின் அனுமதியுடன், மேலும் ஒரு மாடி கட்டப்பட்டு, ஆசிரமம் புதுப்பிக்கப்பட்டது. தன்னார்வலர்களின் தொடர்ந்த முயற்சியினாலும், அப்யாசிகளின் பங்களிப்பாலும், 18 மாதங்களுக்குள் இந்த வேலை முடிக்கப்பட்டது.







அதன் பலனாக, முதல் மாடியில், உட்பக்க தூண்கள் ஏதும் இல்லாமல், நல்ல காற்றோட்டத்துடன் கூடிய, 3600 சதுர அடி உள்ள, தியான மண்டபம் உருவானது. மாஸ்டரின் அனுமதியுடன், 2011 பிப்ரவரி 2-ம் தேதி முதல் தியான மண்டபம் பயன்படுத்தப்படுகிறது.

## செயல்பாடுகள்

தற்பொழுது, சுமார் 125 அப்யாசிகள், ஆசிரமத்தில் நடக்கும் ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்தில் கலந்து கொள்கின்றனர். தின்சுகியா மையத்தில், இளைஞர்களின் பங்கேற்பில் அதிக முன்னேற்றம் தெரிகிறது. தின்சுகியா மையத்திற்கு மட்டுமல்லாமல், மற்ற துணை மையங்களின் அப்யாசி பயிற்சி முகாம், வரவேற்புக் கூட்டம் போன்றவைகளுக்கும் ஆசிரமம் பயன்படுத்தப்படுகிறது. மேலும், அப்யாசி அடையாள அட்டை தொடர்பான வேலை, புத்தக விநியோகம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் அப்யாசி வருகை பதிவேடு பராமரிப்பு ஆகியவையும் இந்த ஆசிரமத்தில் நடக்கின்றன.

இந்த மையம் மிஷனின் வளர்ச்சிக்கான தூண்டுகோலாக இருந்து வருகிறது. மற்ற துணை மையங்களான் திக்பாய், டோம்டூமா, நஹர்காட்டியா, திப்ருகர், சிப்சாகர், ஜோர்ஹாட், நஜிரா, டுலியாஜான், ஜகுன் மற்றும் வடக்கு லக்கிம்பூர் போன்றவை பிறகு தோன்றின. தின்சுகியா சிறிய ஆசிரமமாக இருந்த போதிலும், வடகிழக்கு இந்தியாவில் மிஷனின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றி உள்ளது.







## பிரிசெப்டர்கள் பயண நிகழ்ச்சி- தெற்கு கர்நாடகா



2011, ஜூன் 25 மற்றும் 26-ம் தேதிகளில், தெற்கு கர்நாடகாவின் அனைத்து மையங்களிலும், பிரசெப்டர்களின் இரண்டு நாள் பயண நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், தனி சிட்டிங், ஞாயிற்றுக் கிழமை முழுநாள் நிகழ்ச்சி, இல்லக்கூட்டங்கள் ஆகியவை, அனைத்து மையங்களிலும் ஒரே சமயத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சி, 32 மையங்களில், தன்னார்வலர்கள் மற்றும் 58 பிரசெப்டர்கள் உதவியுடன் நடத்தப்பட்டது. ஜூன் 25 அன்று, 30 இல்லக்கூட்டங்கள் நடைபெற்றன. பயிற்சியின் பல்வேறு அம்சங்கள் கலந்துரையாடப்பட்டு, தெளிவாக்கப்பட்டன. பலர் பயிற்சியில் சேர்வதற்கு ஆர்வமாக இருந்தனர்.

26ம் தேதி நிகழ்ச்சி, பண்டாராவிற்கு தயார்படுத்திக் கொள்ளுதல் என்ற கலந்துரையாடலுடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து வினா- விடை நிகழ்ச்சி நடந்தது. தேர்வு செய்து பேசும் நிகழ்ச்சியில், அப்யாசிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இந்த முயற்சி, வரவேற்பும் பாராட்டும் பெற்றது. பங்கேற்றவர்கள் அனைவரும், தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும், அவர்களுடைய சந்தேகங்களை பிரிபெக்ட்களிடம் தெளிவு செய்து கொள்ள ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

சுயசேவை புரிந்த அப்யாசிகளின் அர்ப்பணிப்பும், ஈடுபாடுமே, இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்கு வழியாக அமைந்தது.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.